**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 526/2019 P.W.9/L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சுரேஷ்குமார் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 16.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் A1 ஆஜர். A2 ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. A3 died. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது வள்ளியூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 14.12.2014ம் தேதி கருங்கல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்த பொழுது கருங்கல் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கோபிநாதன் அவர்களால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 662/2014 சட்டப்பிரிவுகள் 294(b), 323 இ.த.ச 4 of TNWPH Act என்ற வழக்கை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் 15.12.2014-ம் தேதி காலை 08.00 மணிக்கு சென்று சாட்சிகள் ஜேசுதாசன் மற்றும் தேவராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் இவ்வழக்கில் சாட்சியான கங்கா என்பவரை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் கமலையன், பேபி, ராஜேந்திரன், ஸ்ரீகலா ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்துத்தேன்.

3. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கோபிநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்ட வாதிக்கு

சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் குற்றம்சுமத்தப்பட்ட நபர்கள் மூவரும் முன்பிணை பெற்று ஜாமீனில் வெளிவந்தனர்.

4. அவரது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது 294(b), 323 இ.த.ச 4 of TNWPH Act சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று உடனடியாக காவல்நிலையத்திற்கு எந்தவொரு தகவலும் தரவில்லை என்றால், சரிதான். 4 நாட்கள் கழித்து தான் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்தது என்றால், சரிதான். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் நேரடியாக காவல்நிலையம் வந்து எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால், சரிதான்.

2. மருத்துவமனையில் இருந்து காவல்நிலையத்திற்கு எந்தவொரு Intimationனும் கிடைக்கவில்லை என்றால், சரிதான். 14.12.2014ம் தேதி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அது 16.12.2014ம் தேதியன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால், ஆவணங்கள் படி சரிதான்.

3. முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்த தாமதம் மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தாமதத்தை குறித்து காரணங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாட்சி கமலையன் போலிஸ் விசாரணையின் பொழுது சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறியுள்ளார் என்றால், சரிதான்.

4. சாட்சிகளை நான் எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால், காயம்பட்ட நபர் கங்கா என்பவரை மருத்துவமனையில் வைத்தும் மற்ற தனிப்பட்ட சாட்சிகளை சம்பவம் நடந்த ஊரில் 15.12.2014–ம் தேதி விசாரணை செய்தேன். ஆனால் நீதிமன்றத்தில் உள்ள ஆவணத்தில் 15.12.2015 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தட்டச்சு பிழையால் ஆண்டு 2015 என குறிப்பிடப்பட்டுள்ளது.

5. நான் சொல்வது போல் சாட்சிகளை சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து விசாரணை செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. வழக்கு சம்பவயிடத்திலிருந்து தடையப்பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால், சரிதான். மேலும் இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்றால், சரிதான்.

6. உண்மையில் சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் நான் தடையப்பொருட்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால், சரியல்ல. சாட்சி ராஜேந்திரன் என்பவரின் சொத்து எந்த இடத்தில் அமைந்துள்ளது என்றால், அது குறித்து விசாரணை எதுவும் செய்யவில்லை. அவர் எந்த இடத்தில் நின்றார் என்பது குறித்தும் எனது விசாரணையில் துலங்கியது என்றால், சரிதான்.

7. இரயில்வே தண்டவாளத்தின் அருகே கங்கா என்பவரின் வீடு அமைந்துள்ளது என்றால், சரிதான். அதற்கு முன்பாக ராஜையன் வீடு உள்ளது என்றால், சரிதான். ராஜையன் என்பவரின் வீட்டிற்கு அருகே வடக்கு நோக்கி வளைவான சாலைகள் அமைந்துள்ளதாக வரைபடத்தில் துலங்கவில்லை என்றால், சரிதான்.

8. மேற்படி வளைவான சாலையில் தாஸ் என்பவரின் வீடு அமைந்துள்ளது என்றாலும், அது வரைபடத்தில் துலங்காது என்றாலும், தாஸ் என்பவரின் வீடு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது வளைவான சாலையில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்படவில்லை.

9. வரைபடத்தில் வடக்கு நோக்கி குழிக்கோடு ரோடு அமைந்துள்ளது என்றால், சரிதான். தாஸ் என்பவரின் வீடு குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அவரது வீடு இல்லை என்றாலும், தென்னந்தோப்பு தான் உள்ளது என்றாலும், சரியல்ல.

10. நான் சம்பவயிடம் செல்லாமல் காவல்நிலையத்தில் வைத்து வரைபடம் தயார் செய்தேன் என்றால், சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வேறு எங்கோ நடந்த சம்பவத்தை வைத்து 4 நாட்கள் யோசனை செய்து நிரபராதிகளான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது ஒரு பொய்யான புகார்மனு கொடுக்கப்பட்டு அதனடிப்படையில் தவறாக புலனாய்வு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

11. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த சம்பவம்

நடைபெறவில்லை எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.